


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜூன் 28, 2018 | புரட்சி 17 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00

## கிராமப்புற பெண்–ஆண் இளைஞர்கள் சம அளவில் பங்கேற்றனர்

# சிந்தனைக் கூர் தீட்டிய, ஏற்காடு பயிலரங்கம்

இராசிபுரம் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்காட்டில் ஜூன் 23, 24ஆம் தேதிகளில் நடத்திய பெரியாரியல் பயிலரங்கம், கருத்துக் களமாகவும், விவாத அரங்கமாகவும் சிறப்புடன் நடந்து முடிந்தது.

இந்தப் பயிலரங்கில் பங்கேற்க நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் முன் பதிவு செய்திருந்தனர். ஆனாலும் பங்கேற்பாளர் எண்ணிக்கை அதிகரிப்பதால் கவனச் சிதைவு மற்றும் ஏற்பாட்டு வசதிக் குறைவு கருதி எண்ணிக்கைக் குறைக்கப்பட்டு முதல் முறையாக பெரியாரியல் குறித்து அறிய விரும்பு வோருக்கு முன்னுரிமை தரப்பட்டு, பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஏற்கனவே பயிலரங்கில் பங்கேற்ற கழகத் தோழர்கள் இதில் பங்கேற்காது தவிர்க்கலாம் என்ற அடிப்படையில் புதிய தோழர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தேர்வு செய்தார். மொத்தம் பங்கேற்ற 51 பயிற்சியாளர்களில் பெண்கள் 21 பேர் என்பது இப்பயிலரங்கின் சிறப்பாகும். கிராமத்தி லிருந்து முதல் தலைமுறையாகப் படித்த ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் பங்கேற்ற இந்த முகாமில் இளம் பெண் தோழர்கள் முனைப் புடன் பங்கேற்று கருத்துகளை குறிப்பெடுத்து கேள்விகளை எழுப்பி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.


ஏற்காடு, கிளியூர் அருவிப் பகுதியில் ‘ஸ்கை ரெசிடன்சி’ அரங்கில் குளிர்ச்சியான இடையூறு இல்லாத இயற்கையான அமைதிச் சூழலில் பயிலரங்கம் நடந்தது. அலைபேசித் தொடர்புகள் ஏதும் கிடைக்கப் பெறாத பகுதி என்பதால் இரண்டு நாளும் அலைபேசியின் குறிக்கீடுகள் முற்றாக விடை பெற்றிருந்தன.

முதல் நாள் நிகழ்வு - காலை உணவுக்குப் பிறகு 9 மணியளவில் அறிமுகத்துடன் தொடங்கியது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் அறிமுக உரையைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘பெரியார் - அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில் பேசினார். பெரியாரின் கலகங்களோடு தொடங்கிய இளம்பிள்ளை பருவம்; குடும்பச் சூழலுக்கு எதிராகப் பயணித்த அவரது குடும்ப வாழ்க்கை; குடும்பத்துக்குள்ளே அவர் உருவாக்கிய கொள்கைக் கலகம்; பணக்கார சொகுசு வாழ்க்கையை முற்றாக உதறித் தள்ளித் தொடங்கிய அவரது பொது வாழ்க்கைப் பயணம்; தலைமை தாங்கிய கட்சிகளில் அவர் நடத்திய கொள்கைப் போராட்ட வரலாறுகளை - முதல் பகுதியாகவும்; தேனீர் இடைவேளைக்குப் பிறகு பெரியார் வலியுறுத்திய சுயமரியாதை - சமூக நீதி பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, தனிநாடு விடுதலைக்கான இன்றைய பொருத்தப்பாடு குறித்தும் பேசினார்.

தொடர்ந்து தேனீர் இடைவேளைக்குப் பிறகு வீரா கார்த்திக், ‘கடவுள் மறுப்புத் தத்துவமும் பெரியாரும்’ என்ற அமைப்பில் புராண ஆபாசங்கள், கடவுள்கள் குறித்த கற்பனைப் புனைவுகள், கடவுள் மறுப்பு தத்துவம் குறித்து விளக்கினார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு, ‘இந்துத்துவம்-பெரியார்-அம்பேத்கர்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விரிவாகப் பேசினார். பெரியார், அம்பேத்கர் இருவருமே சாதி-தீண்டாமை ஒழிப்புக்கு - இந்துமதம், பார்ப்பனியம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நோக்கியே அவர்கள் போராட்டம் இருந்ததை அவர்களது கருத்துகள் வழியாக எடுத்துக்காட்டி, பெரியார் - அம்பேத்கரை முறையே பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் தலைவர்களாக மட்டும் குறுக்கிப் பார்ப்பது சரியான புரிதல் அல்ல என்பதை விளக்கினார்.

பட்டியல் இனப் பிரிவினருக்கு இடஒதுக்கீட்டு எண்ணிக்கையை வரையறுப்பதற்கு அவர்கள் குறித்த மக்கள் தொகை எண்ணிக்கை ஏற்கனவே எடுக்கப் பட்டிருந்தது - சட்டத்தில் இடஒதுக்கீட்டை உறுதி செய்ய அம்பேத்கருக்கு உதவியது. அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்டோர் குறித்த மக்கள் தொகை எண்ணிக்கை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் என்பவை இல்லாத காரணத்தால், பிற்படுத்தப்பட் டோர் இடஒதுக்கீட்டை உறுதி செய்ய முடியாத நிலையில் அம்பேத்கர் இருந்தார். ஆனாலும், எதிர்காலத்தில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைவதற்கும் அதன் வழியாக அவர்களுக்கான இடஒதுக்கீடு உரிமைகள் பெறுவதற்குமான வாய்ப்புகளைச் சட்டத்தில் உருவாக்கி வைத்தவர் அம்பேத்கர். அதேபோல் பட்டியல் இனப் பிரிவினருக்கு வேலை வாய்ப்புக்கான ஒதுக்கீடு மட்டும் முதலில் சட்டத்தில் இடம் பெற்றிருந்ததே தவிர, கல்விக்கான இடஒதுக்கீடு இல்லை. தொட்டிகளில் தண்ணீர் நிரப்பினால்தான் குழாய்களில் தண்ணீர் வரும் என்பதுபோல, முதலில் படித்தவர்கள் உருவானால் தானே வேலை வாய்ப்பு கிடைக்க முடியும் என்ற கேள்வியை எழுப்பினார் பெரியார். வகுப்புவாரி உரிமையை உச்சநீதிமன்றம் செல்லாது என்று கூறிய நிலையில், பெரியார் தமிழ்நாட்டில் நடத்திய போராட்டம் காரணமாக அரசியல் சட்டம் முதன் முதலாகத் திருத்தப்பட்ட போதுதான் பட்டியல் இனப் பிரிவினருக்கும் கல்வியில் இடஒதுக்கீட் டுக்கான உரிமை சட்ட வடிவம் பெற்றது என்று விளக்கியதோடு பயிற்சியாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் விளக்கம் அளித்தார்.



மாலை தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து, மடத்துக்குளம் கழகத் தோழர் மோகன், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடந்தது. தோழர்களின் பங்கேற்போடு நடந்த இந்நிகழ்வின் வழியாக மூடநம்பிக்கைகளையும், ஜாதி வர்ணாஸ்ரமக் கொடுமைகளையும், நீட் திணிப்பையும் சிறப்பாக விளக்கினார்.

### இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் பயிலரங்கம் காலை 7.30 மணியளவில் தொடங்கியது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், ‘இடஒதுக்கீடு வரலாறு’ குறித்து விரிவாகப் பேசினார். நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் தொடங்கிய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பிறகு சுப்பரயான் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த முத்தையா முதலியார் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு ‘சுதந்திரம்’ பெற்ற காலத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப் பட்டோருக்கான தனி இடஒதுக்கீடாக உறுதி செய்யப்பட்டு, பிறகு படிப்படியாக இடஒதுக்கீடு கொள்கை தீவிரமாக செயல்பட்டதையும், 1935ஆம் ஆண்டிலேயே மத்திய அரசுப் பணிகளில் தமிழ் நாட்டுக்கு மட்டும் பட்டியல் இனப் பிரிவினருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் இடஒதுக்கீடு அமுலில் இருந்ததையும் ‘சதந்திரம்’ கிடைத்த உடனேயே அது நீக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியதோடு, மத்திய அரசு நியமித்த காகாகலேல்கர் ஆணையம், மண்டல் ஆணையம், தமிழ்நாடு அரசு நியமித்த ஏ.என்.சட்ட நாதன் ஆணையம் பரிந்துரைகளையும் எடுத்துக் காட்டி, இடஒதுக்கீட்டு வரலாற்றை முழுமையாக விளக்கினார். தனியார் துறை இடஒதுக்கீட்டின் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘தமிழர்- திராவிடர்’ குறித்துப் பேசினார். அரசியலில் தமிழர் அடை யாளத்தையும் பண்பாட்டில் பார்ப்பனிய எதிர்ப்புக் கான திராவிடர் அடையாளத்தையும் பெரியார் முன் வைத்ததையும், பெரியார் பேசிய திராவிடத்துக்கு எதிராக, ஒருசில அமைப்புகள் முன் வைக்கும்

(4ஆம் பக்கம்)

## பயிலரங்கத்துக்கு நன்கொடை வழங்கிய தி.மு.க தோழர் பாலுவுக்கு பாராட்டு

பயிலரங்கத்துக்கு ரூ.25,000 நன்கொடை வழங்க முன் வந்து முகாமை நடத்துமாறு கூறியவர் முன்னாள் தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளரும், இராசிபுரம் பகுதியைச் சார்ந்த தி.மு.க. பிரமுகருமான பாலு ஆவார். அவருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி சால்வை போர்த்தி, பாராட்டி நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

நிகழ்வை முழுமையாக ஒளிப்பதிவு செய்து, வீடியோ பதிவாக்கிய சித்தோடு கழகத் தோழர் எழிலன் மற்றும் அவருக்கு உடனிருந்து உதவிய தோழர்களுக்கும் இரண்டு நாளும் சிறப்பாக உணவு தயாரித்து வழங்கிய ஏற்காடு பிரபாகரன் உணவு விடுதி உரிமை யாளரும் கழகச் செயல் பாட்டாளருமான பெருமாள் ஆகியோரைப் பாராட்டி நினைவுப் பரிசு மற்றும் நூல்களை கழகத் தலைவர் வழங்கினார். பயிலரங் கத்தை முன்னின்று ஏற்பாடு செய்த இராசிபுரம் கழகச் செயல்பாட்டாளர் சேகுவேரா, அவரது இணையர் மற்றும் கமலக் கண்ணன் நிகழ்வில் பாராட்டப் பெற்றனர்.



## விபூதியை அழிக்கக் கூடாதா?

## பொன் இராதாகிருஷ்ணன் மிரட்டுகிறாரா?

எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு ஸ்ரீரங்கம் கோயிலில் அர்ச்சகர் பூசிய விபூதியை அழித்து விட்டார் என்பதற்காக அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்கிறார், மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன்.

மத அடையாளங்களை தரித்துக் கொள்வது தனி உரிமை; அதைக் கட்டாயப் படுத்த முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் நெற்றியில் விபூதி பூச மாட்டார் என்பது தெரிந்தும், அர்ச்சகர் பூசியபோது அதை மறுக்காமல் பண்பாடோடு எதிர்க் கட்சித் தலைவர் தடுக்காமல் ஏற்றுக் கொண்டார். அதற்குப் பிறகு, அதை அகற்றிக் கொண்டிருக்கிறார். அர்ச்சகர் விபூதி பூசி விட்டார் என்பதற்காக அதை அழிக்கவே கூடாது என்கிறாரா அமைச்சர்?

விபூதி, குங்குமம் வைக்கும் பழக்கமுள்ள அமைச்சர் பொன் இராதாகிருஷ்ணன், வைணவக் கோயிலுக்குப் போகும்போது அய்யங்கார் அர்ச்சகர் அவரது நெற்றியில் நாமத்தைப் போட்டு விட்டால், அதுவும் இந்துமத புனித சின்னம்தான் என்று அமைச்சர் அதை அழிக்காமல் அதே நாமத்தோடு பவனி வருவாரா?

வடகலை நாமம், தென்கலை நாமத்தை மறுக்கிறது; தென்கலை நாமம் வடகலை நாமத்தை மறுக்கிறது;. இரண்டையும் விபூதி மறுக்கிறது. அனைத்து அடையாளங்களும் இந்துமத அடையாளங்கள்தான். இருந்து விட்டுப் போகட்டுமே என்று நினைக்காமல், சொந்த மத அடையாளங்களை மறுக்கும் இவர்களுக்கு, விபூதியைப் புறக்கணித்தால் மட்டும் ஏன் கோபம் வர வேண்டும்?

குன்றக்குடி அடிகளார், பெரியாருக்கு விபூதி பூசிய போது, பெரியார் அதை அழிக்கவில்லை என்கிறார், அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன். அடிகளார் பெரியாருக்கு விபூதி பூசவில்லை. அடிகளாரின் உதவியாளர்தான் வழமையான சடங்காக பெரியார் நெற்றியில் விபூதியைப் பூசினார். ஆனாலும் பண்பாடு கருதி பெரியார் அதைத் தடுக்காமல், அதற்குப் பிறகு அப்போதே அதை அகற்றி விட்டார். இதுதான் உண்மை. ‘அரைகுறை’ செய்திகளை அமைச்சராக இருப்பவர் உளறிக் கொட்டக் கூடாது.

கடவுள் நம்பிக்கையோடு விபூதி உள்ளிட்ட மதச் சின்னங்களை ‘பயபக்தி’யோடு ஏற்றுக் கொண்டிருக்கும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவார்களாம். அவர்கள் நிலங்களை பசுமை வழிச் சாலைக்காக பறிப்பார்களாம்; நீட் தேர்வை திணிப்பார்களாம்;

இப்படி ‘விபூதியும் – நாமமும்’ போடும் மக்களின் வாழ்வுரிமையைப் பறிப்பவர்கள்தான் இப்போது ‘விபூதி’க்காக பொங்கி எழுகிறார்கள்!

# சமூக நீதி என்பதும் பண்பாடுதான்

**விடுதலை இராசேந்திரன்**

**பார்ப்பனியம், இந்துமதம், வேதம், சாஸ்திரம், புராணம் ஊடாக மனித உணர்வுகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஜாதிய வேர்களை எதிர்க்க வேண்டும்.**

ஆதித் தமிழ்ச்சமூகம் சாதி, மத அடையாளமற்றதாக இருந்தது. இடையில் புகுந்த ஆரியப் பண்பாட்டை தமிழ்ச் சமூகம் எளிதாக ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தான் தமிழகத்தில் நான்கு வருணமுறை முழுமையாக இல்லை. சத்திரியர், வைசியப் பிரிவு தமிழகத்தில் கிடையாது. வேதத்திலும் சாதிகள் இல்லை. நெகிழ்ச்சித் தன்மையுடன் இருந்த வருணாசிரமத்தை பார்ப்பனியம் சூழ்ச்சியால் கெட்டிப்படுத்தியது. வர்ணா சிரமத்தில் 4 பிரிவுகளுக்குள் ஏற்பட்ட இனக்கலப்பு, வாழ்ந்த இடம், தொழில் அடிப்படையில் சாதி முறை உருவானது. தமிழகத்தில் குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் தமிழர்கள். தெலுங்கு, கன்னடம் பேசுகிறவர்கள் தமிழர்கள் இல்லை என்று சில அமைப்புகள் பிளவை ஏற்படுத்துகின்றன. பேசுகிற மொழியைவிட சாதி அடையாளமற்ற அல்லது சாதியற்ற கொள்கையை ஏற்றுக் கொள்பவர்களையே தமிழன் என்பதற்கான அடையாளமாக முற்போக்குவாதிகள் பார்க்கிறோம். சாதியற்ற தமிழரையும், சமூகத்தையும் உருவாக்க முடியுமா? சாதி அற்ற அல்ல சாதி கரைப்பு என்பது சாத்தியம் என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். சொந்த சாதியில் திருமணம் செய்து கொடுத்த பிறகு, விவாகரத்து பெற்ற பெண்ணிற்கு வேறுசாதி பையனை மறுமணம் செய்கிறார்கள். சாதியின் பயன் குறைய குறைய சாதிய உணர்வும் குறைந்து விடுகிறது. சாதி என்பதற்கான பலன், பயன், தேவை இல்லாமல் போனால் சாதியும் காணாமல் போகும் அல்லது காட்சிப் பொருளாக இருக்கும். சாதி கடந்த தோழமை, சகோதரத்துவம், ஒருவருக்கொருவர் உதவுதல் என்ற பண்பாட்டை வளர்த்தெடுக்கும்போது, சாதி அதன் பயனை இழக்கிறது. வலுவிழந்து கொண்டிருக்கும் சாதி கட்டமைப்பை, வாக்கு வங்கி தேர்தல் அரசியலுக்காக உயிர்கொடுக்க ராமதாஸ் போன்றவர்கள் முயற்சித்தார்கள். அதற்காக சாதி கூட்டமைப்பை உருவாக்கினார்.

சாதி அமைப்பு உள்ளுக்குள்ளேயே பல முரண்பாடுகள் கொண்டிருப்பதால் அந்த அமைப்பையே தகர்த்துவிட்டது. சென்னையில் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக சாதி இருக்கிறது; முரண்பாடுகளற்றதாக உள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் குறிப்பிட்ட சாதி ஆதிக்க இறுக்கத்தில் இருக்கிறது. எனவே, மாவட்டத்திற்கேற்ப செயல்திட்டத்தை வகுத்து, சாதி எதிர்ப்பு முற்போக்கு சக்திகள் செயலாற்ற வேண்டும். தலித்திடம் உள்ள சாதிப் பற்றை, அவர்களின்பாதிப்போடு ஒப்பிட்டு அணுக வேண்டும். தலித் அல்லாத சாதியைச் சேர்ந்தவர்கள் சுயசாதியை எதிர்க்கிற போது சாதியவாதிகளுக்கு கடும் நெருக்கடி உருவாகும். தமிழகத்தில் முற்போக்கு இயக்கங்களின் செயல்பாடுகளினாலும், சமூகநீதி என்கிற இடஒதுக்கீட்டினாலும் இடைநிலை சாதிகளுக்குள் பகைமை குறைந்துள்ளன. பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்குள் சாதிமாறி திருமணம் செய்து கொண்டாலும் பெரிய அளவில் எதிர்ப்பு எழுவதில்லை. ஆனால், தலித் மக்களோடு திருமண உறவு கொள்கிறபோதுதான் பெருமளவு சாதியத் தாக்குதல் நடக்கிறது. பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களிடையே சுயசாதி மறுப்பு என்ற செயல் திட்டத்தைக் கொண்டு செல்ல வேண்டும். பார்ப்பனியம், இந்துமதம், வேதம், சாஸ்திரம், புராணம் இவைகளின் ஊடாக மனித உணர்வுகளில் சாதி கட்டமைப்பு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த சாதியக் கட்டமைப்பின் வேர்களை எதிர்க்க வேண்டும். தீண்டாமை ஒழிப்போடு, அடுத்தகட்டமாக சாதி ஒழிப்பை நோக்கி செல்வோம் என்று பொதுவுடமை இயக்கத்தை சேர்ந்த தீண்டாமை ஒழிப்பு முன்னணித் தலைவர்கள் கூறுகின்றனர். சாதி ஒழிப்பு திட்டத்தோடு அவற்றின் ஊற்றுக்கண்களையும் எதிர்க்க வேண்டும். சாதிய அமைப்பின் கட்டமைப்பை ஓரளவு தொளதொளக்கச் செய்திருப்பது இடஒதுக்கீடு கொள்கைதான். சாதிய சமத்துவத்தை தாண்டி சாதியை கடக்க, சாதி மறுப்பு திருமணங்களை நோக்கிச் செல்வதை ஊக்குவிக்க வேண்டும். காவி ஆதிக்கத்தால் தமிழகத்தின் வேலைவாய்ப்பு உரிமை பறி போகிறது. அனைத்துத் துறைகளிலும்வட மாநிலத்தவரைப் புகுத்துகிறார்கள். மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 2013-16 காலத்தில் தமிழகத்தில் உள்ள வருமானவரித் துறை, கலால்துறை, சுங்கத்துறையில் ஆட்கள் நியமிக்கப் பட்டனர். அதன்படி, தமிழகத்தை சேர்ந்தவர்கள் 116பேரும், வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் 1988 பேரும் பணியமர்த்தப் பட்டுள்ளனர். நீட் தேர்வு மூலம் வட மாநிலங்களை சேர்ந்தவர்கள் தமிழக மருத்துவக் கல்லூரிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளனர். தமிழகத்தின் சமூக நீதியையும், கல்விச் சூழலையும் ஒழித்து விட்டால், எளிதாக காவிகள் காலூன்ற முடியும் என்று சதி செய்கின்றனர்.

சாதியற்ற தமிழகத்தில் வர்ணாசிரமத்தை புகுத்தியது போல், தமிழகத்தை வடமாநிலத்தவரை கொண்டு வந்து சமூக நீதியை சீர்குலைக்கின்றனர். கிராமப்புற மாணவர்கள் பயில மருத்துவக்கல்வியில் மாவட்ட ரீதியாக ஒதுக்கீடு வைத்திருந்தோம், யூனிட் முறை (வேலூரில் மருத்துவக் கல்லூரி என்றால் அந்த மாவட்டத்தை சுற்றியுள்ளவர்கள் தான் சேர்க்க முடியும்) கொண்டிருந்தோம், கிராமப்புற மாணவர் களுக்கு இடஒதுக்கீடு வைத்திருந்தோம். இவற்றையெல்லாம் நீதிமன்றங்கள் தடுத்துவிட்டன. இடஒதுக்கீட்டை கூட ஜனநாயகப்படுத்தினோம். 50 விழுக்காட்டில் 20 விழுக்காட்டை எம்.பி.சி.க்கு ஒதுக்கினோம். மேலும் ஜனநாயகப்படுத்தும் வகையில் இஸ்லாமியர்களுக்கு 3.5 விழுக்காடு ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது. தலித் மக்களுக்கான இடஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு உள்ஒதுக்கீடு கொடுத்தோம். இப்படிப்பட்ட சமூகநீதி கொள்கையை கொண்ட மாநிலத்தை முற்றிலும் சீர்குலைக்கிறார்கள். பல்கலைக் கழக துணைவேந்தர்களை பிற மாநிலத்தவரை கொண்டு வந்து குவிக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள பினாமி அரசை பயன்படுத்தி பாஜக நுழைய சாலைஅமைக்கிறது. தமிழகத்தின் சமூகநீதி கொள்கை என்பதை விட சமூக நீதி பண்பாட்டை தகர்க்கிறது. சாதி ஒழிப்பு என்ற முற்போக்குப் பண்பாட்டிற்கு அடித்தளமாக இருப்பது சமூகநீதி பண்பாடு தான். பெண்மையை மதிக்கக்கூடிய, சமத்துவத்தை பேசக் கூடிய சமூகநீதி பண்பாடே சாதிகளுக்குள் சமத்துவத்தைக் கொண்டு வந்துள்ளது. சாதிய இயங்கியலையும், அதனைக் கடக்கவும் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. தமிழகத்தை காவிமயமாக்கலுக்கான நடவடிக்கைகளை தடுக்கவும், அவர்களிடமிருந்து மக்களை விலக்கவும் இணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது. உலகமயமாக்கலும், ஆரியமய மாக்கலும் கைகோர்த்துக் கொண்டிருக்கிறது. பன்மைத்துவத்தை அழித்து ஒருமைத்துவத்தை திணிக்கிறது. இவற்றை முறியடிப்பது என்ற இணைப்புப் புள்ளியில் அம்பேத்கரிய, பெரியாரிய, இடதுசாரி இயக்கங்கள் கைகோர்த்து நிற்கின்றன. சாதியற்ற தமிழகம், காவியற்ற தமிழகம் என்ற முழக்கத்திற்கு பின்னால் சமூகப்பணியும், அரசியல் பணியும் இணைந்து இருக்கிறது. இதை இணைந்து முறியடிப்போம்.

*(தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் -கலைஞர்கள் சங்கத்தின் தென்சென்னை மாவட்டக்குழு சார்பில், ‘சாதியற்ற தமிழர், காவியற்ற தமிழகம்’ எனும் தலைப்பில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் சுருக்கம்)*

**‘தீக்கதிர்’ நாளேட்டிலிருந்து**

## வன்கொடுமை பாதுகாப்புச் சட்டத்தைப் பாதுகாக்கக் கோரி ஜூலை 2இல் இரயில் மறியல்: தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

பட்டியல் இன பழங்குடி மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்த வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்து விட்டது உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது உடனே வழக்குப் பதிவு செய்ய முடியாமலும், கைது செய்ய முடியாமலும் தடுத்திருப்பதோடு குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன் ஜாமின் கேட்கவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இனி வன்கொடுமை சட்டத்தை மீறும் ஜாதி வெறியர்கள் சட்டப் பாதுகாப்பு வந்து விட்டதால் மேலும் வன்கொடுமைகளை நடத்துவதற்கு வழி திறந்து விட்டுள்ளது இந்தத் தீர்ப்பு.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உ.பி., ம.பி., இராஜஸ்தான் மாநிலங்களில் போராடிய பட்டியல் இன மக்ககள் மீது அம்மாநில பா.ஜ.க. ஆட்சி துப்பாக்கி சூடு நடத்தியதில் 9 பேர் பலியாகி விட்டனர்.

இந்நிலையில் இந்தச் சட்டம் ஏற்கனவே இருந்த நிலையில் அப்படியே பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பாதுகாப்பு கூட்டியக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதில் நமது திராவிடர் விடுதலைக் கழகமும் இணைந்திருக்கிறது. தீண்டாமை ஒழிப்பு முன்னணி, ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், ஆதித் தமிழர் பேரவை, ஆதித் தமிழர் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிட தமிழர் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து எதிர் வரும் ஜூலை 2ஆம் தேதி தமிழகம் முழுதும் இரயில் மறியல் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை செல்லாமல் ஆக்கக் கூடிய அவசர சட்டத்தை, நடுவண் அரசு உடனே பிறப்பிக்க வேண்டும்.
- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை அரசியல் சட்டத்தின் 9ஆவது அட்டவணையில் சேர்க்க வேண்டும்.
- துப்பாக்கிச் சூட்டினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும்.

கழகத் தோழர்கள் ஜூலை 2 அன்று நடக்கும் இரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கொளத்தூர் மணி
தலைவர்
திராவிடர் விடுதலைக் கழகம்

# வரலாற்றில் இருட்டடிக்கப்பட்ட 'பீமா கோரேகாவ் யுத்தம்'

*வரலாற்றில் இருட்டடிக்கப்பட்ட 'பீமா கோரேகாவ் யுத்தம்' ஆவணப் படமாகியுள்ளது*

'மஹார்'கள் ஆண்ட 'ராஷ்டிரம்' (தேசம்) என்ற பொருளில் உருவானதுதான், 'மஹாராஷ்டிரா' எனும் மாநிலத்தின் பெயர். ஆனால், மஹார் இன மக்களின் வீரம், வரலாற்றில் பல காலமாக இருட்டடிப்பு செய்யப்பட்டே வந்திருக்கிறது 1927இல், அம்பேத்கர், அந்த வரலாற்றை மீண்டும் மக்களின் நினைவுக்குக் கொண்டுவரும்வரை!

அந்த வரலாறுதான் பீமா கோரேகாவ் யுத்தம்! மகாராஷ்டிர மாநிலத்தை பேஷ்வாக்கள் ஆண்டு வந்தனர். அவர்களின் ஆட்சியில், மஹார் இனத்தவர்கள் சாதியரீதியான கொடுமைகள் பலவற்றைச் சந்தித்தனர். அப்போது, ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்களின் ராணுவத்தில், மஹார் இன மக்கள் சேர, அவர்களுக்குச் சமூகத்தில் கொஞ்சம் மரியாதை கிடைக்கிறது. ஆனால், அது ராணுவ வீரர்களுக்கு மட்டுமேயான மரியாதையாக இருந்தது.

இந்நிலையில், ஆங்கிலேயர்களுடன் இணைந்து, பேஷ்வாக்களை (மராட்டியப் பார்ப்பனர்) எதிர்த்தார்கள் மஹார் மக்கள். 1818-ம் ஆண்டில் பீமா கோரேகாவ் எனும் இடத்தில் தோராயமாக 25 ஆயிரம் பேஷ்வா வீரர்களை வெறுமனே 500 மஹார் இன வீரர்கள் தோற்கடித்தனர். இதனால், மஹார் இனத்தவரை பேஷ்வாக்கள் 'துரோகிகள்' என்று சொல்ல, ஆங்கிலேயர்களோ, மஹார்களின் வீரத்தைப் பறைசாற்றும்விதமாக யுத்தம் நடந்த இடத்தில், நினைவுத் தூண் எழுப்பினார்கள். அந்த யுத்தத்துக்கு 200-வது ஆண்டு இது. தங்களின் முன்னோர்களை நினைவுகூரும் விதமாக, ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 1-ம் தேதி, அந்த நினைவிடத்துக்குச் சென்று, மஹார் இன மக்கள் கொண்டாடுவார்கள்.

கல்விப் புல வரலாற்றுப் புத்தகங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்ட இந்த யுத்தத்தைப் பற்றி, 'தி பேட்டில் ஆஃப் பீமா கோரேகாவ்' என்ற தலைப்பில் கடந்த ஆண்டு, ஆவணப்படம் ஒன்று வெளியானது. பீமா கோரேகாவ் தொடர்பாக இருக்கும் ஒரே ஆவணம், தற்போதைக்கு இது மட்டும்தான். அதை இயக்கியவர், சோம்நாத் வாக்மாரெ. மும்பையில் உள்ள டாடா இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சயின்சஸ் கல்வி நிறுவனத்தில் ஊடகத் துறை ஆய்வு மாணவரான இவர், சென்னையில் அண்மையில் நடந்த இப்படத்தின் திரையிடலுக்கு வந்திருந்தார்.


"நான் என்னதான் கல்வி கற்றிருந்தாலும், சாதிதான் மற்றவர்களுக்கு முதலில் தெரிகிறது" என்பவர், அடிப்படையில் ஒரு சமூகவியல் பட்டதாரி. கல்லூரிக் காலத்தில், மாணவர் இதழுக்கு இவர்தான் ஆசிரியர். அப்போதே, சாதிப் பிரச்சினைகள் குறித்து அதில் எழுதிவந்தார். அப்படித்தான் அவருக்கு, ஊடகத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது.

"அதன் பிறகு ஊடகவியல் துறையில் மேற்படிப்புப் படித்தேன். எங்களுடைய வகுப்பறை (class room) பெரும்பாலான நேரம் 'வகுப்பு' அறையாகத்தான் (caste room) இருந்தது. மிகவும் நுட்பமான சாதிய ரீதியான கொடுமைகளை நான் அங்கு சந்தித்தேன்" என்பவர், மேற்படிப்பை முடித்தவுடன் பூனேயில் உள்ள 'ஃபிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா'வில் (எஃப்.டி.ஐ.ஐ.) கொஞ்ச காலம் பணியாற்றினார்.

"அங்கே பணியாற்றும்போது, நிறைய படங்களைப் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. நான் பார்த்த படங்கள் பலவற்றில், தலித்துகளை 'சப்ஜெக்ட்'டாகப் பயன்படுத்தி இருந்தார்கள். தலித்துகள் என்றால் அவர்கள் பலியாட்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்பதாகவே சித்தரிக்கப் பட்டிருந்தனர். எந்தப் படத்திலும், தலித்துகளின் எழுச்சியை நேர்மறையாகக் காட்டவில்லை.

அப்போதுதான், நமக்கான சினிமாவை நாம்தான் எடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது" என்பவர் 'கிரவுட் ஃபண்டிங்' மூலமாகத் தன்னுடைய ஆவணப்படத்தை எடுத்துள்ளார். இதுவரை, இந்தப் படம் நாடு முழுக்க, கிட்டத்தட்ட 60 இடங்களில் திரையிடப்பட்டுள்ளது. 'யூடியூப்' தளத்திலும் காணக் கிடைக்கிறது. (https://bit.ly/2JXKvb6).

தற்போது, அம்பேத்கரியச் சிந்தனையாளர் கெயில் ஓம்வெத் குறித்து ஆவணப்படம் ஒன்றை இயக்கி வருகிறார் சோம்நாத் வாக்மாரெ. சாதியைப் பற்றிப் பேசும்போது, அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளைப் பயன் படுத்துங்கள் என்கிறார் இவர். அது ஏன் என்று கேட்டபோது, "'உயர் சாதி', 'தாழ்த்தப்பட்ட சாதி' என்பதெல்லாம் தவறான வார்த்தைகள். 'முற்படுத்தப்பட்ட வகுப்பினர்', 'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்', 'பட்டியலினத்தவர்' போன்ற சொல்லாடல்கள் தான் சரியானவை.



அம்பேத்கரே 'தலித்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. அவ்வளவு ஏன் 'பட்டியலினத்தவர்' என்ற வார்த்தையைக்கூட அவர் பயன்படுத்தவில்லை. 'ஒடுக்கப்பட்ட வகுப்பினர்' (Depressed classes) என்றுதான் பயன்படுத்தினார். இதுபோன்ற சொல்லாடல்களைக் கையாண்டால்தான், 'தலித் ஐகான்', 'தலித் ஃபிலிம் மேக்கர்', 'தலித் எழுத்தாளர்' போன்ற 'அடையாளங்களை' ஒழிக்க முடியும். எங்கேயாவது 'பிராமின் ரைட்டர்' என்று யாராவது அடையாளப்படுத்தப்பட்டுள்ளாரா?" என்கிறார்.

"சமூகச் செயற்பாட்டாளர் ஆனந்த் டெல்டும்டே 'பீமா கோரேகாவ் யுத்தம் ஒரு கட்டுக்கதை' என்கிறாரே?" என்று கேட்டதற்கு, "'தி வயர்' இணைய இதழில் அவர் எழுதியக் கட்டுரையை நானும் படித்தேன். முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனந்த் டெல்டும்டே, வரலாற்றாசிரியர் கிடையாது. அவர் ஒரு மேலாண்மைக் கல்விப் பேராசிரியர். இரண்டாவது, அவர் அம்பேத்கரின் உறவினராக இருந்தபோதும், அவர் அம்பேத்கரியத்தைப் பின்பற்றுவதில்லை. அவர் ஒரு கம்யூனிஸ்ட். அவர் எழுதிய கட்டுரையில், 'பீமா கோரேகாவ் யுத்தம் நடைபெற்றதற்கு எந்தச் சான்றும் இல்லை' என்கிறார். அப்படி என்றால், பீமா கோரேகாவில் உள்ள அந்த நினைவுச் சின்னம் எப்படி வந்தது? வரலாற்றை நாம் புதைபடிமங்களிலிருந்தும், பாறைகள், கற்கள் போன்றவற்றிலிருந்துதானே தெரிந்துகொள்கிறோம்.

'அப்படி ஒரு யுத்தம் நடைபெறவில்லை என்று சொல்கிறீர்களே. அதற்கு என்ன சான்று?' என்று நான் அவருக்கு மின்னஞ்சல் அனுப்பினேன். இதுவரை அவர் பதிலளிக்கவில்லை!" என்கிறார்.

மாணவர்கள் வரலாற்றைப் பாடப்புத்தகங்களுக்கு வெளியே சமூகத்தில் படித்து, ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை இவருடைய ஆவணப்படமும் இவருடனான உரையாடலும் நமக்கு உணர்த்துகின்றன.

**'தமிழ் இந்து' நாளேட்டிலிருந்து**

## மகர்களைக் கொடுமைப்படுத்திய பேஷ்வா பார்ப்பனர்கள்

*பேஷ்வா பார்ப்பனர்கள் 'மகர்' மக்களுக்கு இழைத்த கொடுமைகள் குறித்து அம்பேத்கர் தரும் தகவல்கள்:*



1. அன்றைய மராத்திய பேஷ்வாக்களின் ஆட்சியில், ஒரு தெருவில் எதிரில் வரும் இந்துவின் மீது தீண்டத்தகாதோரின் நிழல் பட்டால்கூட தீட்டாகிவிடும் என்ற காரணம் காட்டி - தீண்டத்தகாதவர்களை தெருவுக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. இந்துக்கள் தவறி தீண்டத்தகாதவர்களைத் தொட்டு அவர்கள் தீட்டாகி விடுவதைத் தடுக்க, தீண்டத்தகாதவர் தன் கழுத்திலோ மணிக்கட்டிலோ கறுப்புக் கயிறு ஒன்றை அடையாளமாகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.
2. பேஷ்வாவின் தலைநகரான பூனாவில் தீண்டத்தகாதவர், தன்னுடைய இடுப்பில் துடைப்பம் ஒன்றைக் கட்டிக் கொண்டு, தான் போகும் பாதையில் – தன் காலடித் தடத்தின் புழுதியைப் பின்புறமாகக் கூட்டியபடி சென்றாக வேண்டும் என்ற ஆணை இருந்தது. இல்லாவிட்டால், அதே தெருவில் நடக்கும் இந்து தீட்டாகி விடுவானாம்.
3. பூனாவில் தீண்டத்தகாதவர் எங்கு போனாலும் தன் கழுத்தில் மண்கலயம் ஒன்றைத் தொங்கவிட்டுக் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆணையும் இருந்தது. அவன் தன் எச்சிலை அந்தக் கலயத்தில் துப்பிக் கொள்ள வேண்டும். ஏன் அப்படி என்றால், தீண்டத்தகாதவரின் எச்சில் தரையில் விழுந்தால் – அதைத் தெரியாமல் மிதித்து விடும் இந்து தீட்டாகி விடுவானாம்!

மத்திய இந்தியாவைச் சேர்ந்த 'பலாய்' என்கிற தீண்டத்தகாத சமூகத்துக்கு, இந்துக்கள் இழைத்த கொடுமைகள் என் கருத்துக்குச் சான்றாகும். 1928 சனவரி 24 அன்று, 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் இதுபற்றிய செய்தி வெளியாகி உள்ளது. இந்தூர் மாவட்டத்தில் உள்ள கனாரியா, பிச்சோலி – ஹப்சி, பிச்சோலி மர்தானா முதலிய 15 கிராமங்களில் இருந்த கலோதர்கள், ராஜபுத்திரர்கள், பார்ப்பனர்கள் முதலிய மேல்சாதி இந்துக்கள் – பட்டேல்கள், பட்வாரி உள்ளிட்டோர் – தத்தம் கிராமத்தைச் சேர்ந்த 'பலாய்' இனத்தாரிடம், 'பலாய்'கள் அந்த கிராமங்களில் வாழ வேண்டும் என்றால், மேல்சாதி இந்துக்கள் இட்ட சில விதிமுறைகளை ஏற்று நடக்க வேண்டும் என்று அறிவித்தனர். அந்த விதிமுறைகள் என்ன? நீங்கள் எங்களிடையே வாழ விரும்பினால்

1. தங்க சரிகைக் கரை போட்ட உடைகள் அணியக் கூடாது.
2. புதுமையான / வண்ணக் கரைபோட்ட உடைகளை அணியக் கூடாது. இந்து ஒருவன் இறந்து போனால், இறந்து போன இந்துவின் சொந்தக்காரர்களுக்கு – அவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் – இழவுச் செய்தியைப் போய் சொல்ல வேண்டும்.
3. எல்லா இந்து திருமணங்களிலும் ஊர்வலத்தின் போதும் திருமணம் நடக்கும் போதும், பலாய்கள் மேள தாளங்களை இசைக்க வேண்டும்.
4. பலாய்ப் பெண்கள் தங்க, வெள்ளி நகைகளை அணியக் கூடாது. நவீன ஆடைகளையோ, ரவிக்கைகளையோ அணியக் கூடாது.
5. இந்து பெண்களுக்கு பலாய்ப் பெண்கள்தான் பிரசவம் பார்க்க வேண்டும்.
6. எந்தவித கூலியும் கேட்காமல், பலாய் மக்கள் தொண்டூழியம் செய்ய வேண்டும். ஓர் இந்து மனமுவந்து தருவதை, பேசாமல் வாங்கிக் கொள்ள வேண்டும்.
7. இந்த விதிமுறைகளை ஏற்று நடக்க பலாய்கள் சம்மதிக்கா விட்டால், அவர்கள் கிராமங்களை விட்டு வெளியேற்றப்படுவர்.

**ஆதாரம் : 'ஜாதி ஒழிப்பு' நூல்**

## 19 நாட்களே நாடாளுமன்றம் வந்த மோடி

நான்கு ஆண்டுகளில், 19 நாட்கள் மட்டுமே பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருப்பதால், அவர் முறையாக நாடாளுமன்றம் வருகைதர உத்தரவிடக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் ஜூன் 12 அன்று பொதுநல வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் சஞ்சய் சிங் இந்த வழக்கைத் தொடர்ந்திருக் கிறார். கடந்த 4 ஆண்டுகளில் பிரதமர் மோடி ஒட்டு மொத்தமாகவே 19 நாட்கள்தான் நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார்.

அத்துடன், சிலமுறையே மோடி நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார். அரசின் மசோதா ஒன்றை அறிமுகம் செய்யும் போதும், 5 முறை தனது அமைச்சர்களை அறிமுகம் செய்யும் போதும், நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது 6 முறையும், சிறப்பு விவாதத்தின் மீது 2 முறையும் மோடி பேசியுள்ளார். ஆனால், பிரதமர் நரேந்திர மோடி நான்கு ஆண்டுகளில் பா.ஜ.க.வின் 800-க்கும் மேற்பட்ட பேரணிகளில் கலந்து கொண்டிருக்கிறார் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அடுத்த இதழில்....**

**சென்னை மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் தொடர்ச்சி இடம் பெறும்.**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெரியார் பெருந் தொண்டர் வி.ஆர். வேங்கன் தனி முயற்சியில் நிறுவிய பெரியார் சிலை திறப்பு

*தருமபுரி மாவட்டம், பாப்பி ரெட்டிபட்டியை அடுத்த வெங்கட சமுத்திரத்தில் பெரியார் முழு உருவ வெண்கலச் சிலை, 2.6.2018 சனிக் கிழமை காலை 10.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியால் திறந்து வைக்கப்பட்டது.*

பெரியார் பெருந்தொண்டரும், தமிழ்நாடு அரசால் பெரியார் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவருமான வி.ஆர்.வேங்கன் தனிமுயற்சியில் அவரால் நிலம் வழங்கப்பட்டு இயங்கிவரும் வெங்கடசமுத்திரம் அரசினர் மேனிலைப் பள்ளியின் எதிர்ப்புறத்தில் உள்ள அவரது சொந்த நிலத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தனியார் நிலத்தில் நிறுவப்படும் சிலைகளுக்கு எவ்வித அரசு அனுமதியும் தேவையில்லை என ஏற்கனவே உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவராலும், காவல்துறையாலும் கொடுக்கப்பட்ட கடும் நெருக்கடிகள் காரணமாக இருமுறை உயர்நீதி மன்றத்தில் ஆணை பெற்று வந்த நிலையிலும் மாவட்ட ஆட்சியரும், காவல்துறையும் சிலையை நிறுவ தடைசெய்து வந்தனர். ஆனால் புதிய மாவட்ட ஆட்சியராய் மலர்விழி அவர்கள் பொறுப்பேற்றவுடன் சிலையை நிறுவ உரிய ஒத்துழைப் புகள் வழங்குமாறு வருவாய், காவல் துறையினருக்கு அறிவுறுத்தினார்.

அதனடிப்படையில் 2.6.2018 அன்று காலை பெரியார் சிலை திறப்பு சிறப்புற நடந்தேறியது. சிலை திறப்பு குறித்து தருமபுரி மாவட்டக் கழக அமைப் பாளர் சந்தோசகுமார், தோழர்கள் காவேரிப்பட்டிணம் பிரபு, தருமபுரி பரமசிவம், நங்கவள்ளி கிருட்டிணன் ஆகியோர் வெங்கட சமுத்திரம், பாப்பிரெட்டிபட்டி, அரூர், தருமபுரி ஆகிய பகுதிகளில் சுவரெழுத்துகள் எழுதியும், சேலம், தருமபுரி, கிருட்டிணகிரி மாவட்டங்களில் அழைப்பிதழ்கள் விநியோகித்தும் சிறப்பாக விளம்பரம் செய்தனர்.

தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில், கழகத் தலைவர் கொளத்தூர் மணியால் சிலை திறந்து வைக்கப்பட்டது.



சிலை திறப்பைத் தொடர்ந்து, அருகில் அமர்ந்திருந்த திருமண மண்டபத்தில், கோவை இராம கிருட்டிணன் தலைமையில், பெரியார் பெருந்தொண்டர் வி.ஆர்.வேங்கன் வரவேற்புரையாற்ற நிகழ்வுகள் தொடங்கின.

அந்நிகழ்வில் உள்ளூர் ஆண்களும் பெண்களும் மட்டுமின்றி பல்வேறு பகுதிகளில் இருந்து பெரியாரிய சிந்தனையாளர்கள் பெருமளவில் வந்திருந்ததால், அந்த பெரிய மண்டபம் நிறைந்ததோடு இட மில்லாமல் ஏராளமானோர் வெளியே நிற்கவேண்டியிருந்தது.

நிகழ்வில் தலைமையுரைத் தொடர்ந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ந.குப்புசாமி, கே.சிங்காரம், பெரியார் மருத்து வமனை டாக்டர். தி. பழனிசாமி, தி.மு.கவின் தீர்மானக் குழு உறுப்பினர் கீரை.விசுவநாதன் ஆகியோரின் உரைகளுக்குப் பின்னர் முன்னாள் அமைச்சர் வ.முல்லைவேந்தன், ம.தி.மு.கவின் அமைப்புச் செயலாளர் அ.வந்தியத்தேவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி இப்பகுதி பெரியார் இயக்கம் வலுவாக இருந்த பகுதி என்பதால், சுற்றிலும் பாப்பி ரெட்டிபட்டி, அதிகாரப்பட்டி, கவுண்டம்பட்டி, இராமியம்பட்டி, மெணசி என ஐந்து கிலோமீட்டர் சுற்றளவிலேயே ஐந்து சிலைகள் நிறுவப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டார். கடவுள் நம்பிக்கை கொண்டோரும் கூட அண்மையில் ஒரு பார்ப்பன இந்து வெறியன் பெரியார் சிலைக்கு எதிராகப் பதிவிட்டபோது ஆற்றிய எதிர்வினை பெரியாரின் சமூகப் பணிகளை மக்கள் எவ்வளவு தூரம் உள்வாங்கியுள்ளனர் என்பதையே காட்டியது என்று பெருமைப் பொங்கக் குறிப்பிட்டார். அவரது நிறைவுரை யோடு அரங்க நிகழ்வு முடிவடைந்தது. நிகழ்வினை பாவலர். பெரு.முல்லையரசு ஒருங்கிணைத்தார்.

வி.ஆர்.வேங்கனாரின் மகன்கள் வே.தமிழ்ச்செல்வன், டாக்டர்.வே. புத்தன் ஆகியோர் வந்திருந்த அனைவருக்கும் அசைவ விருந்தளித்து மகிழ்ந்தனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புகளுக்கு பதிலளித்தும், திராவிடர் அடையாளம் தொன்னாட்டில் சமஸ்கிருதப் பார்ப்பன பண்பாட்டை ஏற்க மறுத்தவர்களே திராவிடர்கள் என்ற அம்பேத்கர் தந்த விளக்கத்தையும் சோவியத் நாட்டின் மானுடவியல் ஆய்வாளர் 'திராவிடர்' என்று ஒரு இனம் இருந்ததை சான்றுகளோடு நிறுவியதையும் எடுத்துக்காட்டி விரிவாக விளக்கமளித்தார்.

தேனீர் இடைவேளைக்குப் பிறகு, 'பூவுலகின் நண்பர்கள்' அமைப்பைச் சார்ந்த பொறியாளர் சுந்தர்ராஜன், 'உலகமயமாக்கலும் சுற்றுச்சூழலும்' என்ற தலைப்பில் பேசினார். உலகமயமாக்கல் என்பது வெறும் வணிகம் மட்டுமல்ல, அதில் வளரும் நாடுகளின் வளங்களைச் சுரண்டும் ஆபத்துகளே முதன்மையானவை என்பதை சுட்டிக்காட்டி, மக்களின் சுயசார்புத் தன்மையைப் பறித்து தன்னைச் சார்ந்து நின்றே வாழ வேண்டும் என்ற பொருளாதார அரசியலுக்கு இழுத்துச் சென்று, மக்களை பன்னாட்டுக் கம்பெனிகளின் அடிமைகளாக்கும் ஆபத்துகளை ஏராளமான உதாரணங்களோடு சுட்டிக்காட்டினார். 'வளர்ச்சித் திட்டங்கள்' என்ற போர்வையில் மனிதகுலத்தையே அழிக்கும் திட்டங்கள் திணிக்கப்படுகிறது மனித குலமே அழிந்த நிலையில் வளர்ச்சி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடுகிறது. 'வளர்ச்சி வேண்டுமா? அழிவு வேண்டுமா?' என்ற கேள்வி நம் முன் நிற்கிறது. இரண்டில் எதற்கு நாம் முன்னுரிமை தரப் போகிறோம் என்ற கேள்வியை எழுப்பினார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகளால் நீர் மாசு, காற்று மாசு படும், ஆபத்துகளை எதிர் கொண்டிருக்கும் நமது மக்கள் உயிரைக் கொல்லும் வியாதிகளால் பாதிக்கப்படுவதை விரிவாக எடுத்துரைத்தார். பயிற்சியாளர்கள் எழுப்பிய ஏராளமான சந்தேகங்களுக்கு விரிவான விளக்கமளித்தார்.

இடைவேளை உணவுக்குப் பிறகு 'அய்யம் போக்குதல்' என்ற நிகழ்வு தொடங்கியது. பங்கேற்பாளர்கள் எழுப்பிய ஏராளமான கேள்விகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி விரிவாகப் பதிலளித்தார்.

பெரியார் இயக்கம் தலித் மக்களுக்காகப் போராடவில்லை என்றும், அது பிற்படுத்தப்பட்டோருக்கான இயக்கம் என்றும், அயோத்திதாசப் பண்டிதரை இருட்டடிப்பு செய்து விட்டது என்றும், பட்டியல் இனப் பிரிவினரை பயன்படுத்தி, பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமைகளையே பேசியது என்றும், பெரியார் இயக்கத்தின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை சுட்டிக்காட்டி, பயிற்சியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விரிவான விளக்கங்களோடு பதிலளித்தார்.

பெரியாரும் அம்பேத்கரும் பட்டியல் இனப் பிரிவினரின் குறிப்பிட்டப் பிரச்சினைகளை முன் வைத்துப் போராடவில்லை; அவர்கள் போராட்டம் இந்து மதத்துக்கு எதிராகவும், பார்ப்பனியத்துக்கு எதிராகவும் தான் இருந்தது. தீண்டாமைக்கு எதிராக பெரியார் குறிப்பாக நடத்திய போராட்டமாக வைக்கம், நீடாமங்கலம் காங்கிரஸ் மாநாட்டில் நடந்த சாதிக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தைக் கூறலாம். அதேபோல் அம்பேத்கர் நடத்திய 'மகர்குள' நீர் எடுப்புப் போராட்டத்தைக் கூறலாம். மற்றபடி குறிப்பான பிரச்சினைகளுக்கு என்றில்லாமல், ஜாதியை உற்பத்தி செய்யும் இந்துமதம், பார்ப்பனியத்தை முன் வைத்தே அவர்கள் போராடினார்கள் என்று விளக்கினார். நீண்ட நேரம் நடந்தது இந்த நிகழ்வு. பயிற்சியாளர்கள் பலரும் தங்களுக்கு தெளிவான புரிதல் கிடைத்தது என்று கூறினார்கள். தொடர்ந்து பங்கேற்ற பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இரண்டு நாள் பயிலரங்கையும் கழகப் பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன், நெறியாள்கை செய்து வழி நடத்தினார். புதிய இரு பால் இளைஞர்களுக்கான இந்தப் பயிலரங்கம், சிறப்பான திட்டமிடலோடு அதன் நோக்கத்திலும் சிறந்தப் பயனை எட்டியது.

**– நமது செய்தியாளர்**

## 'நிமிர்வோம்' வாசகர் வட்ட சந்திப்பில் வி.பி.சிங் படம் திறப்பு




'நிமிர்வோம்' வாசகர் வட்டத்தின் 5வது சந்திப்பு 23.06.2018 அன்று காலை 11 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை தலைமை அலுவலகத்தில் வேழவேந்தன் (தென்சென்னை மாவட்டத் தலைவர்) தலைமையில் நடைபெற்றது. பெரியார் யுவராஜ் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

'நிமிர்வோம்' அக்டோபர் மாத இதழ்க் குறித்து ராஜீ மற்றும் இமானுவேல் துரை தங்களது பார்வையை எடுத்துரைத்தனர். தொடர்ந்து, சமூகநீதி காவலர் வி.பி.சிங் பிறந்தநாளையொட்டி அவருடைய உருவப்படத்தை மதிமாறன் (எழுத்தாளர்) திறந்து வைத்து "இட ஒதுக்கீடு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th June 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN